**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(நவம்பர் 23-ம் தேதி முதல் நவம்பர் 27-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (18.11.16- 21.11.16)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 7.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27- 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6- 7 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (07:00 LM T) | 79- 81 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (14:00 LM T) | 66- 87 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 |
| காற்றின் திசை (டிகிரி) | 0 |

27.11.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் - 1<br>23.11.16 | நாள் - 2<br>24.11.16 | நாள் - 3<br>25.11.16 | நாள் - 4<br>26.11.16 | நாள் - 5<br>27.11.16 |
| மழை (மி.மீ.) | 4 | 0.5 | 0 | 0 | 1 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 29 | 29 | 29 | 29 | 29 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 76- 83 | 76- 83 | 76- 83 | 76- 83 | 76- 83 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ கிழக்கு | 2/ கிழக்கு | 2/ கிழக்கு | 2/ கிழக்கு | 2/ கிழக்கு |

வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம், சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | நேரடி நெல்விதைப்பு மற்றும் இயந்திர நடவு | விவசாயிகள் வரக்கூடிய மழையை பயன்படுத்தி தங்கள் வயல்களை தயார் செய்து நேரடி நெல் விதைப்பு அல்லது இயந்திர நடவு முறையை விரைந்து செய்து முடிக்குமாறு கேட்டுக்கொள்ள்படுகிறர்கள். |
| மானாவாரி பயிர்கள் | வளர்ச்சி பருவம் | மானாவாரி பயிர்களில் மண்ணிலிருந்து நீர் ஆவியாதலை தடுக்கவும் மற்றும் மண்ணில் ஈரப்பதத்தை தக்க வைக்கவும் வயலை களைக்கொத்தி கொண்டு களை நிர்வாகம் செய்து புழுதி மூட்டம் செய்யவும்.<br>மானாவாரியில் மண்ணின் ஈரப்பதத்தை காக்க பயிர்களின் இடைவெளிகளில் பயிர்கழிவுகளைக்கொண்டோ அல்லது மரத்தின் இலைகள் மற்றும் கொப்புகளைக்கொண்டு மூடகம் அமைக்கவும். |
| மானாவாரி மற்றும் இறவை பயிர்கள் | வளர்ச்சி பருவம் | தற்பொழுது நிலவும் வானிலையில் மானாவாரி பயிர்களில் மண் ஈரம் இருக்கும்பட்சத்தில் பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்க 2 சத டி.ஏ.பி. அல்லது 1 சத யூரியா கரைசலை மாலை வேளையில் மழை இல்லா நாட்களில் தெளிக்கவும். |
| | | தற்போது நிலவிவரும் வானிலையில் இறவை மற்றும் மானாவாரி பயிர்களில் துத்தநாக குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய 0.5 சத துத்தநாக சல்பேட் கரைசலை இலைவழி மூலமாக தெளிக்கவும். இவ்வாறு தெளிக்கும்போது மானாவாரியில் தகுந்த ஈரப்பதம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| சோளம் மற்றும் மக்காச்சோளம் | வளர்ச்சி பருவம் | தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் சோளம் மற்றும் மக்காச்சோளத்தில் தண்டுத்துளைப்பானின் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த கார்பரில் நனையும் தூள் 500 லிட்டர் தண்ணீருக்கு 1 கிலோ வீதம் கலந்து தெளிக்கவும். |
| பருத்தி | சப்பை கட்டும் பருவம் | தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் பருத்தியில் தத்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 200 SL 100 மி.லி/ எக்டர் அல்லது பிப்ரோனில் 5% SC @ 1500-2000 மிலி /எக்டர் தெளிக்கவும். |
| பயறுவகைப் பயிர்கள் | வளர்ச்சி பருவம் | தற்பொழுது நிலவும் வானிலையில் பயறுவகைப்பயிர்களில் புகையிலை வெட்டுப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 SL 100-125 மிலி /எக்டர் அல்லது அல்லது குளோர்பைரிபாஸ் 20 WC @ 1 லிட்டர்/ எக்டர் அல்லது 3 % வேப்பஎண்ணெய் மிலி /எக்டர் தெளிக்கவும். |
| மிளகாய் | நடவு செய்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் சுருக்கங்களுடன்; மேல் நோக்கி சுருண்டு காணப்படும். இலைக்காம்பு நீண்டு இருக்கும.; இப்பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 3 மி.லி/ 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமீத்தோயேட் 30% EC @ 1 மி.லி. / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மானாவாரி | பின்தங்கும் | தற்போது நிலவி வரும் இலேசானது முதல் மிதமான மழை பெற்றிருப்பதால் அம்மழையைப் |

| | | |
|---|---|---|
| பயிர்கள் | மழை பருவம் | பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வயலில் கம்பு, கொள்ளு, கொண்டைக்கடலை, கொத்தமல்லி, சென்னா மற்றும் பனிவரகு போன்ற பயிர்களை விதைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறர்கள். |
| | வளர்ச்சி பருவம் | பருவமழையில் விதைத்த பயிர்களில் முறையாக பயிரகளை களைந்து தகுந்த பயிர் எண்ணிக்கை பராமரித்து மண்ஈரத்தையும் பாதுகாக்க வேண்டும். |

குறுஞ்செய்தி- மழை: 23, 24& 27.11.16 : 4, 0.5& 1 மி.மீ. பயறுவகைப்பயிர்கள்- புகையிலை வெட்டுப்புழு- இமிடாகுளோபிரிட் 17.8 SL 100- 125 மி.லி./ எக்டர் (அ) 3% வேப்பஎண்ணெய் தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்**
**கோவில்பட்டி**